**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 242/2019**

Deposition of the witness for Prosecution **PW** 2
Name : **கலைக்குமார்**
Father's/Husband's Name :

Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (14.07.2026)

Accused present

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது செங்கோட்டை காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்குமுன்பு செங்கோட்டை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த யோபு சம்பத்ராஜா மற்றும் உதவி ஆய்வாளர்கள் மாதவன், மாரிச்செல்வி ஆகியோர்கள் தற்போது பணிமாறுதலாகி சென்றுவிட்டார்கள். அவர்கள் பதிவு செய்து வைத்திருந்த ஆவணங்களை பார்த்து சாட்சியம் அளிக்கிறேன்.

கடந்த 03.02.2019 ஆம் தேதி சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த யோபுசம்பத்ராஜா என்பவர் காவல் நிலைய பொறுப்பிலிருந்தபோது செங்கோட்டை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்ற அங்கு சிகிச்சையில் இருந்த ஈனமுத்து என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று அதன்தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.57/2019 சட்டப்பிரிவுகள் 294(பி), 324, 506(2) இதச மற்றும் பிரிவு 4 TNPHW Act படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை **<u>அ.சா.ஆ.2</u>** ஆகும். பின்னர் வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளர் மாதவன் அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 03.02.2019 ஆம் தேதி 14.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ஐயப்பன், சத்தியா ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி

வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆகும். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகும்.

பின்னர் பட்டியல் சாட்சிகள் ஈனமுத்து, வண்ணகிளி, காளிதாஸ், ராசையா, ஐயப்பன், சத்தியா மற்றும் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்த யோபுசம்பத்ராஜா ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அத்துடன் அவர் பணிமாறுதலாகி சென்றுவிட்டதால் அந்த வழக்கு கோப்பினை உதவி ஆய்வாளர் மாரிச்செல்வி அவரது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 13.03.2019 ம தேதி 11.30 மணிக்கு மாவடிக்கால் தோப்பு மாரியம்மன் கோவில் பக்கம் வைத்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். பின்னர் காயம்பட்ட ஈனமுத்து என்பவருக்கு சிகிச்சை அளித்த செங்கோட்டை அரசு மருத்துவர் உசேன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றிதழ் பெற்றுள்ளார். அந்த காயச்சான்று **அ.சா.ஆ.5** ஆகும். அத்துடன் வழக்கு விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

**நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். சொன்ன மாதிரி, சொன்ன நாள், சொன்ன நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நடக்காத சம்பவத்திற்கு பின்யோசனையுடன் தயாரிக்கப்பட்ட ஆவணங்களுக்காக வேண்டி ஒருதலைபட்சமாக விசாரணை செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்துள்ள பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவை காவல் நிலையத்தில் வைத்து பின் யோசனையுடன் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் ஒருதலைபட்சமாக விசாரித்து பிழையான குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.**

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Shenkottai

S ILAIYARAJA Digitally signed by S ILAIYARAJA Date: 2026.07.14 17:55:24 +0530

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**...**
**IN THE COURT OF Judicial Magistrate Court, Shencottai**
**CC No. 242/2019**

Deposition of the witness for Prosecution **PW** 1
Name : **ஈனமுத்து**
Father's/Husband's Name :
Age :
Village and Taluk :
Caste and Religion :
Calling :
Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on (14.07.2026)

Accused present

<u>முதல் விசாரணை</u>

நான் களங்காதகண்டியில் குடியிருந்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரியை தெரியும் அவர் எனது மகன். தற்போது நானும், எதிரியும் சமாதானமாக சென்றுவிட்டோம். சமாதான மனுவில் கையொப்பம் செய்து தாக்கல் செய்துள்ளோம். வழக்கு பற்றி எதுவும் சொல்ல விரும்பவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பில் சாட்சி வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

கடந்த 03.02.2019 ம் தேதி எனது வீட்டு பக்கம் வைத்து எதிரி என்னை பார்த்து அசிங்கமாக பேசி, அருவாளால் தலையில் வெட்டி காயம் ஏற்படுத்தி, கொலைமிரட்டல் விடுத்தார் என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு செங்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சையல் இருக்கும்போது நடவடிக்கை எடுக்க புகார்வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது எதிரியுடன் சமாதானமாக சென்றுவிட்டதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல.

Taken down by me / before me in Open court, interpreted/ read over to the witness, and admitted by the deponent to be correct.

S ILAIYARAJA

Digitally signed by S ILAIYARAJA
Date: 2026.07.14 17:55:29 +0530

Judicial Magistrate, Shenkottai